**செய்தி வெளியீடு எண் : 1304** **நாள் : 02.08.2022**

# செய்தி வெளியீடு

மருத்துவ உபகரணங்கள் விதிகள் 2017, மருத்துவ உபகரணங்களின் தயாரிப்பு, இறக்குமதி மற்றும் விற்பனை ஆகியவற்றை கட்டுப்படுத்தவும் வரைமுறைப்படுத்தவும் உருவாக்கப்பட்டு, 01.01.2018–ல் நடைமுறைக்கு வந்துவிட்டன. மேற்படி மருத்துவ உபகரணங்கள் விதிகள் 2017–ன் படி 11.02.2020–லிருந்து 30 மாதங்கள் விதிவிலக்கு காலம் முடியும் நிலையில் தற்போது 11.08.2022 முதல் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான மருத்துவ உபகரணங்களுக்கு உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, முகக்கவசம், இலக்க வெப்பமானி (Digital Thermo Meter), அறுவை சிகிச்சை கையுறைகள், PPE Kit, மருத்துவமனை படுக்கை, நோயாளி அணியும் ஆடை, தொடுவில்லை (contact lens), கிருமி நாசினி, தொடுசிகிச்சை கருவி (அக்குபஞ்சர் கிட்), நோயாளி எடை அளவு கருவி, குழந்தை படுக்கைகள் (Rocking infant bed), டீத்தர் கருவி, நெற்றியின் வெப்பநிலையை கண்டறியும் பட்டை, ஸ்டெரிலைசர், ஸ்ட்ரெச்சர், போர்செப்ஸ், வலியை குறைக்க பயன்படும் ஐஸ்பேக், ஓடுபொறி (ட்ரெட்மில்), எலக்ட்ரானிக் மசாஜர், செயற்கை விரல்/கட்டை விரல், கைகவண் ஆகியவைகள் தற்பொழுது Class A மற்றும் Class B மருத்துவ உபகரணங்களாகும்.

Class A மற்றும் Class B மருத்துவ உபகரணங்களின் முழுமையான பட்டியல் CDSCO இணையதளத்தில் (www.cdsco.gov.in) வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த மாநிலத்தில் உள்ள Class A மற்றும் Class B மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் CDSCO–ன் இணையதளம் (online Portal) (www.cdscomdonline.gov.in) மூலம் உற்பத்தி உரிமத்தை பெற விண்ணப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

11.08.2022 முதல் உரிய உரிமம் இல்லாமல் Class A மற்றும் Class B மருத்துவ உபகரணங்களை தயாரிப்பது, மருத்துவ உபகரணங்கள் விதிகள் 2017–ன் படி குற்றமாகும்

மேலும் 11.08.2022 முதல் உரிய மருந்து உரிமம் இல்லாமல் Class A மற்றும் Class B மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதும், மருத்துவ உபகரணங்கள் விதிகள் 2017–ன் படி குற்றமாகும்.

அதேபோல் உரிய தயாரிப்பு உரிமம் இல்லாமல் தயாரிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதும், மருத்துவ உபகரணங்கள் விதிகள் 2017–ன் படி குற்றமாகும்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in